# தமிழ்நாட்டின் உரிமைகள் — நலன்களுக்காக
# நாடாளுமன்றத்தை நாள்தோறும் அதிரவைக்கும் கழக எம்.பி.க்கள்!



### சென்னை, கோவை மற்றும் ஓசூர் உள்ளிட்ட நகரங்களில்
## இந்தியா ஏஐ திட்டத்தின்கீழ் தரவு மையங்கள் அமைக்கப்போவது எப்போது?
### மக்களவையில் — கழக குழுத் துணைத்தலைவர் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 13 -

‘இந்தியாAI’ மிஷன் மூலம் நாடு முழுவதும் எத்தனை AI தொடர்பான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் தமிழநாட்டில் AI தரவு மையங்கள் (Data center) அமைப்படுமா? என மக்களவையில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் கழக குழுத் துணைத்தலைவருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.



அதன் விவரங்கள் வருமாறு

‘இந்தியாAI’ மிஷன்க்காக 2025- 26ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட 2,000 கோடி நிதியிலிருந்து, தமிழ்நாட்டிலுள்ள கல்வி நிறுவனங்கள், AI தொடக்க நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி திட்டங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படும் எனக் கேள்வி எழுப்பினார்.

‘இந்தியாAI’ மிஷன் முன்னேற்றத்திற்காக, அரசாங்கத்தால் தனிப்பட்ட தரவு மையங்களை(Data center) அமைப்பதற்கான திட்டங்கள் உள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்

அவ்வாறு இருந்தால், தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப அடித்தளத்திற்கு முக்கியமான சென்னை, கோயம்புத்தூர் மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் தரவு மையங்களை(Data center) அமைப்பதற்கான திட்டங்கள் உள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்.

‘இந்தியாAI’ மிஷன் மூலம் நாடு முழுவதும் எத்தனை AI தொடர்பான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் எனக் கேள்வி எழுப்பினார்.

AI தொழில்களில் வேலை வாய்ப்பு பெறுவதற்காக மாநில அளவிலான திறன் மேம்பாட்டு திட்டங்கள் கல்வி நிறுவனங்களின் மூலம் செயல்படுத்தப்படுமா? அவ்வாறு இருந்தால், அதன் விவரங்களை தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்

இந்தியாAI மிஷனின் கீழ், தமிழ்நாட்டில் வாகன தொழில் (Automobile Industry) மற்றும் சுகாதாரத் தொழில் (Healthcare Industry) ஆகிய துறைகளில் AI தொழில்நுட்ப முதலீடுகளை அதிகரிக்க தேவையான திட்டங்களை அரசு பரிசீலிக்கிறதா? அவ்வாறு இருந்தால், அதன் விவரங்களை தெரியப்படுத்தவும்.

இவ்வாறு தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

### பிற்படுத்தப்பட்டோர் பட்டியலின வகுப்பினர் — பழங்குடியினருக்கான
## திறன் மேம்பாடு பயிற்சித் திட்டம் முறையாக செயல்படுத்தப்படுகிறதா?
### மக்களவையில் — டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 13-

பிற்படுத்தப்பட்டோர், பட்டியில் இன வகுப்பினர், பழங்குடியினர் ஆகியோருக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம், ஒன்றிய அரசினரால், முறையாக செயல்படுத்தப்படுகிறதா? என மக்களவையில் அரக்கோணம் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி எழுப்பினார்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 11 மார்ச் 2025 அன்று மக்களவையி;ல், பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின வகுப்பினர், மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கான பிரதம மந்திரி தக்சதா திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தின் மூலம், ஒன்றிய அரசு உரிய முயற்சிகளை எடுத்துள்ளதா? என்றும், இத்திட்டத்தால் பயனடைந்வர்களின் எண்ணிக்கையை அறிவிக்க இயலுமா? என்றும் இவர்களுக்கான வேலை வாய்ப்பினை பெருக்க திட்டங்கள் ஏதேனும் உள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் அதிகாரமளித்தல் மற்றும் சமூக நீதித் துறையின் இணைய மைச்சர், பி.எல். வர்மா அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



ஒன்றிய அரசின் அதிகாரமளித்தல் மற்றும் சமூக நீதித் துறையின் அமைச்சகத்தின் இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு :

தமிழ் நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்டோரின் எண்ணிக்கையை 5300 நபர்கள் மட்டுமே பிரதம மந்திரி தக்சதா திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றுள்ளனர் என்றும், ஆனால் இந்திய அளவில் 1,87,000க்கும் மேற்பட்டோர் கடந்த நான்கு நிதி ஆண்டுகளில் பயனடைந்துள்ளனர் என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் பிறபடுத்தப்பட்டோர், பட்டியலின வகுப்பினர், தாழ்த்தப்பட்டோர், தூய்மைப்பணியனர்கள், கழிவு சேகரிப்போர் மற்றும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் அனைவருக்கும் திறன்மே ம்பட்டு பயிற்சி, ஒன்றிய அரசின் நிதியளிப்பின் மூலம், வழங்கப்பட்டு வருகிறது என்றும், இதற்கான விளம்பர ங்கள், சமூக ஊடகங்களின் மூலமும். அச்சு ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன என்றும்,

திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தின் கீழ் அமைந்துள்ள பயிற்சி நிறுவன ங்களின் மூலம், பிரதம மந்திரி தக்சதா திட்டத்தின் பயனாளிகளுக்கு தேவையான பயிற்சி வகுப்புகள் அனைத்து மாநிலங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன என்றும், தொழில் முனைவோரை உருவாக்கவும், வேலை வாய்ப்பினை பெருக்கவும் பயிற்சி நிறைவடைந்த பின்னர் உரிய சான்றிதழ்களை ஒன்றிய அரசே அனைத்து பயனாளிகளுக்கும் வழங்கி வருகின்றது இதனால், பிற்படுத்தப்பட்டோர், பட்டியிலின வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பெரும்பாலோர் கடந்த நான்கு ஆண்டுகளி;ல் பயனடைந்துள்ளனர் என்று ஒன்றிய அரசின் அதிகாரமளித்தல் மற்றும் சமூக நீதித் துறை இணையமைச்சர் பி. எல். வர்மா மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### தொகுதி மறு சீரமைப்பில்
## தமிழ்நாட்டுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அநீதி இழைக்கக் கூடாது!
### மக்களவையில் — டி.எம். கதிர்ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, மார்ச் 13 -

நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கும் தமிழ்நாடு மக்களுக்கும் அநீதி இழைக்கக் கூடாது என்று நாடாளுமன்ற மக்களவையில் ஜீரோ நேரத்தில் கதிர் ஆனந்த் வலியுறுத்திப் பேசினார்.

அவர் பேசியது வருமாறு:-

2026 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடத்தப்படும் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு” வரை மாநிலங்களுக்கு இடையேயான தொகுதி வரையறையை நீக்கக்கூடாது என்பதற்காக 2002 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது (84வது திருத்தம்). தொகுதி வரையறை நிர்ணயச் சட்டம், 2002, நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்ட மன்றங்களில் மொத்த தொகுதிகளின் எண்ணிக்கையை முடக்கி, 2026 வரை தற்போதைய நிலையைப் பேணியது.

தமிழ்நாடு, கேரளா மற்றும் பஞ்சாப் போன்ற குடும்பக் கட்டுப்பாட்டை பரவலாக செயல்படுத்திய மாநிலங்கள் பல நாடாளுமன்ற இடங்களை இழக்க நேரிடும் என்பதாலும், உத்தரப்பிரதேசம், பீகார் மற்றும் ராஜஸ்தான் போன்ற குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களை செயல்படுத்துவதில் மாநிலங்கள் மோசமாகத் தோல்வியடை ந்திருப்பதாலும் இது முக்கியமாக செய்யப்பட்டது.

நமது ஜனநாயகத்தின் கூட்டாட்சி உணர்வை அச்சுறுத்தும் ஒரு கடுமையான கவலையான விஷயத்தை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர நான் முன் வருகிறேன், இது தமிழ்நாடு போன்ற முற்போக்கான மாநிலங்களை விகிதாசாரமாக தண்டிக்கும் அதே வேளையில், கடந்த 3 தசாப்தங்களாக தங்கள் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தத் தவறியவர்களுக்கு அதிக தொகுதிகள் என்று வெகுமதி அளிக்கிறது.

ஒன்றிய அரசின் தொகுதி மறுசீரமைப்பு நிர்ணய அணுகுமுறை அடிப்படையில் நியாயமற்றது மற்றும் மக்கள்தொகை கட்டுப்பாடு, பொருளாதார வளர்ச்சி மற்றும் சமமான வளர்ச்சியில் தமிழ்நாட்டின் தொடர்ச்சியான முயற்சிகளை புறக்கணிக்கிறது. தற்போதைய மக்கள்தொகை, மக்களவைத் தொகுதிகளின் மறுசீரமைப்பின் அடிப்படையில், தமிழ்நாட்டிற்கான மக்களவைத் தொகுதிகள் குறைவதற்கான வாய்ப்பு உள்ளது. இது குறித்த கேள்விக்கு ஒன்றிய அரசிடம் எந்த தெளிவோ உத்தரவாதமோ இல்லை.

திராவிட மாடல் ஆட்சியின் கீழ் தமிழ்நாடு 1990கள் வரை பயனுள்ள குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களை செயல்படுத்துவதிலும் சமூக பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்வதிலும் மிகவும் வெற்றிகரமான மாநிலமாக இருந்து வருகிறது. தமிழ் நாட்டில் மக்கட்தொகை கட்டுப்படுத்த 1990 வரை முன்னெடுத்த “நாமிருவர் நமக்கு இருவர்” கொள்கை பிறகு தற்போது “நாமிருவர் நமக்கு ஒருவர்” என்ற நிலையில் மக்கட்தொகை வெகுவாக கட்டுப்படுத்தப்பட்டது.



இந்த பிறப்பு கட்டுப்பாட்டு அணுகுமுறையின் விளைவாக, வட இந்திய மாநிலங்களுடன் ஒப்பிடும் போது தமிழ்நாட்டின் மக்கள்தொகை வளர்ச்சி கணிசமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தொகுதி மறுசீரமைப்பு நிர்ணயத்திற்கு மக்கள்தொகை மட்டுமே புள்ளி விவரங்களை வலியுறுத்துவது முற்றிலும் நியா யமற்றது, ஏற்றுக்கொள்ள முடியாதது மற்றும் தமிழ்நாட்டிற்கு அநீதியானது.

எனது தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால் தொகுதி மறுசீரமைப்பு வரைவு நிர்ணய செயல்பாட்டில் ஒன்றிய அரசு மாநிலங்களின் வளர்ச்சி மற்றும் முக்கிய குறியீடுகளின் செயல்திறனைக் கருத்தில் கொள்ள வேண்டும். GSDP, தனிநபர் வருமானம், GER, மருத்துவர்கள், மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ உள்கட்டமைப்பு வசதிகள், ஆற்றல் உற்பத்தி, சாலை உள்கட்டமைப்புமேம்பாடு, விவசாய உற்பத்தித்திறன், ஏற்றுமதி வருவாய் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக சாதனைகள் மக்கள்தொகை புள்ளி விவ ரங்கள் மட்டும் அல்ல நமது அரசியலமைப்பின் அடிப்படை இலட்சியங்களில் ஒன்று இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பு ஆகும்.

தமிழ்நாடு மக்களாகிய நாங்கள் பல ஆண்டுகளாகப் தமிழ்நாட்டின் உரிமைகள் மற்றும் மக்களின் நலன்களைப் பாதுகாக்க போராடி வருகிறோம். 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒன்றிய அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு அரசு சமீபத்தில் நிறைவேற்றிய அனைத்துக் கட்சித் தீர்மானம், இந்த நியாயமற்ற நடவடிக்கைக்கு மாநிலத்தின் ஒன்றுபட்ட எதிர்ப்பிற்கு ஒரு சான்றாகும்.

இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாட்டின் உரிமையான நிலையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஒரு அணுகுமுறையை திணிப்பதை விட, தேசிய முன்னேற்றத்திற்காக விடாமுயற்சியுடன் பாடுபட்ட மக்கள் மற்றும் மாநிலங்களின் குரல்களை ஒன்றிய அரசு மதிக்க வேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்கு மகத்தான பங்களிப்பை அளித்த முற்போக்கான மாநிலங்களை பலவீனப்படுத்த தொகுதி மறுசீரமைப்பு நிர்ணயம் ஒரு ரகசிய ஆயுதமாக மாறக்கூடாது. அரசியலமைப்பின் கூட்டாட்சி உணர்வை நிலைநிறுத்த, நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களில் அனைத்து மாநிலங்களுக்கும் எம்.பி.க்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்களின் நியாயமான மற்றும் சமமான பிரதிநிதித்துவத்தை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு டி.எம். கதிர் ஆனந்த் பேசினார்.

### எங்கள் முதல்வர் தெளிவாகக் கூறிவிட்டார்!
## மும்மொழிக் கொள்கையை தமிழ்நாடு ஒருபோதும் எற்காது!
### மக்களவையில் — தமிழச்சி தங்கபாண்டியன் பேச்சு

புதுடெல்லி, மார்ச். 13-

மும்மொழிக் கொள்கையை ஏற்பதில்லை என்பதில் எங்கள் முதல்வர் தெளிவாக இருக்கிறார் என நாடாளுமன்றத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் கூறினார்.

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. மக்களவையில் நேற்று நேரமில்லா நேரத்தின்போது பேசியதாவது:

மதிப்புமிக்க இந்த சபையில் மிகவும் கவலையூட்டும் ஒரு விஷயத்தை கொண்டு வருகிறேன். பி.எம்.ஸ்ரீ திட்டத்தை எங்கள் கட்சித் தலைவர் ஒருபோதும் ஒப்புக் கொள்ளவில்லை. பிரதிநிதிகள் குழு உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், பள்ளிக்கல்வி அமைச்சருடன் மத்திய அமைச்சரை சந்தித்த போதும் ஒப்புக் கொள்ளவில்லை. எங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின், ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று தெளிவாகக் கூறியுள்ளார்.



மத்திய அரசுக்கு ஒன்றை நான் நினைவூட்ட விரும்புகிறேன். கல்வி இன்னும் ஒத்திசைவு பட்டியலில்தான் உள்ளது. இது கூட்டாட்சி அமைப்பு க்கு ஒரு மரண அடியாகும். இதன்மூலம் பள்ளி மாணவர்களின் கல்வியில் விளையாடுகிறீர்கள். பல ஆயிரக்கணக்கான பள்ளி மாணவர்களுக்கு நிதியை மறுக்கிறீர்கள். ஆனால் பின்னர், கல்வி மேம்பாட்டுக்காக நீங்கள் உழைக்கிறீர்கள் என்கிறீர்கள். இது பொய்யானது. தவறான தகவல்களால் அவையை ஏமாற்றுவதை தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது.

நீங்கள் எங்கள் பாதுகாவலர். எங்களுக்கு நீதியளிக்க வேண்டும். மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று எங்கள் முதல்வர் மீண்டும் தெளிவாக கூறுகிறார். நாங்கள் எங்கள் கூட்டாட்சி உரிமைகளுக்காக நிற்கிறோம். ஒதுங்க மாட்டோம். எங்கள் மக்களின் கல்வி உரிமைகளுக்காக போராடுவோம். பி.எம்.ஸ்ரீக்காக 10,000 கோடி ரூபாய் கொடுத்தாலும், அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம். நாங்களே கவனித்துக் கொள்வோம். ஆனால் ஒன்றிய அரசாங்கத்திடம் வேண்டிக்கொள்கிறேன், இந்திய ஜனநாயகத்தின் கூட்டாட்சி அமைப்பில் தாக்குதல் நடத்த வேண்டாம். தலையிடாமல் இருங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

### தமிழ்நாட்டில் இருக்கின்ற
## ஐ.டி. ஐ. க்களின் தரம் உயர்த்தவும் போதிய நிதி ஒதுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?
### மக்களவையில் — கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 13 -

தமிழ்நாட்டில் உள்ள ஐ.டி. ஐ. களின் தரம் உயர்த்தவும், கட்டமைப்புகளை மேம்படுத்தவும் நிதி ஒதுக்கீடு செய்யவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்று மக்களவையில் கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை எழுப்பிய கேள்விகள் வருமாறு:

தமிழ்நாட்டில் இருக்கின்ற ஐ.டி.ஐ. களில் உள்கட்டமைப்புகளை உயர்த்த ஒன்றிய அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளதா?

அத்தகைய ஐ.டி.ஐ. களை சீரமைக்கும் நவீனப்படுத்தவும் தேவையான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா? அவ்வாறெனில் அதன் விவரம் என்ன?

கடந்த 3 ஆண்டுகளில் ஐ.டி. ஐ.களின் உள்கட்டமைப்புகளை சரி செய்ய ஒதுக்கப்பட்ட நிதி பற்றிய விவரம் அளிக்கப்படுமா?

ஐ.டி. ஐ. களும் தொழிற்சாலைகளிலும் ஒருங்கிணைந்து செயல்பட ஊக்கமளிக்கும் வகையில் ஒன்றிய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா? அப்படியெனில் சமீபமாக அதன் பயன்கள் குறித்து விவரிக்க முடியுமா?



தொழில்துறை மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக ஒன்றிய அரசு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஏதேனும் உள்ளதா? அப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஐ. டி. ஐ.கள் மற்றும் தொழிற்சாலைகள் பெற்றுள்ள வளர்ச்சிகள் குறித்து பட்டியலுடன் தெரிவிக்கவும்.

ஐ.டி. ஐ.களின் தரம் மற்றும் உள்கட்டமைப்புகளில் பிரச்சனைகள் ஏற்பட்டால், அவைகளை தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன?

மேற்காணும் கேள்விகளுக்கு ஒன்றிய திறன் மேம்பாட்டு மற்றும் தொழிற்துறை இணை அமைச்சர் ஜெயந்த் சவுத்ரி விரிவான விளக்கங்களுடன் பதிலளித்துள்ளார்.

### பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில்
## ரயில் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும்!
### மக்களவையில் — அருண் நேரு கோரிக்கை!

புதுடெல்லி,மார்ச் 13-

பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் ரயில் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மக்களவையில் அருண் நேரு கோரிக்கை விடுத்தார்-

மக்களவையில் பெரம்பலூர் தொகுதி எம்பி அருண் நேரு பேசியது வருமாறு:-

பிரதமரின் தொகுதி என்பதால் வாரணாசி மேம்படுத்தப்பட்டுள்ளது அதே போல் உள்துறை அமைச்சர் தொகுதி என்பதால் அகமதாபாத் (காந்திநகர்) மேம்படுத்தப்பட்டுள்ளது

நான் மிகவும் பின்தங்கி உள்ள பெரம்பலூர் தொகுதியைச் சேர்ந்தவன் எங்கள் தொகுதிக்குட்பட்ட முசிறியில் பிறந்தவர் நிதிய மைச்சர் நிர்மலா சீதாராமன்.



ரயில் வசதி என்பது எங்கள் தொகுதி மக்கள் பல ஆண்டுகளாக கனவாகவே உள்ளது இந்த கனவை நினைவாக்கும் வகையில் பெரம்பலூர் தொகுதியில் ரயில் தடம் அமைக்க கோரிக்கை விடுக்கிறேன்

நாட்டின் வளர்ச்சியில் தமிழகம் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்

சுதந்திரம் அடைந்த போது உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம், ஒடிசா ,குஜராத் மாநிலங்களைப் போல் தான் தமிழகமும் கல்வி வளர்ச்சி இருந்தது ஆனால் இந்த மாநிலங்களை விட இன்று கல்வி வளர்ச்சியில் இருமொழிக் கொள்கையை கடைப்பிடித்து நாங்கள் முதலிடத்தில் உள்ளோம்

நமது நாட்டின் வலிமையே கூட்டாட்சி தான். கூட்டாட்சி முறையில் வருவாயும், செலவும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் மாநிலத்தில் மக்களின் செலவில் 60% மாநில அரசு ஏற்க வேண்டும் மீதி உள்ள 40% உள்ளாட்சி அமைப்புகள் வரி வசூல் மூலம் திரட்ட வேண்டும்

வருவாய் சரியாக கிடைக்காவிடில் கடன் வாங்குவது வழக்கமாக உள்ளது கடன் வாங்குவது தவறு இல்லை ஆனால் அதிகாரங்களை மாநில அரசிடமிருந்து ஒன்றிய அரசு பறித்துக் கொண்டுள்ளது ஒவ்வொன்றுக்கும் ஒன்றிய அரசின் அனுமதி பெற வேண்டிய நிலையில் உள்ளது இந்த நிலை மாற வேண்டும்

இல்லாவிடில் ஒன்றிய, மாநில அரசு மாநில அரசுகள் உறவு கடுமையாக பாதிக்கும் என்று பெரம்பலூர் தொகுதி பாராளுமன்ற எம்பி அருண் நேரு பேசினார்.

### தமிழ்நாட்டின் கிராமப்புற இளைஞர்களுக்கென செயல்படுத்தியவர்
## திறன் மேம்பாட்டு திட்டங்கள் குறித்த விவரங்கள் என்ன?
### மக்களவையில் — ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 13 -

தமிழ்நாட்டின் கிராமப்புற இளைஞர்கள் மேம்பாட்டிற்கு ஒன்றிய அரசு ஒதுக்கிய பட்ஜெட் எவ்வளவு? திறக்கப்பட்டுள்ள திறன் மேம்பாட்டு மையங்களின் எண்ணிக்கை எத்தனை? என நாடாளுமன்றத்தில் ஆ. மணி . கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் உட்புற கிராமங்களில் வசித்து வரும் வேலையில்லா இளைஞர்களுக்கென ஒன்றிய அரசு செயல்படுத்தி வரும் திறன் மேம்பாட்டு திட்டங்கள் குறித்த விபரங்கள் என்ன ? கடந்த 3 ஆண்டுகளில் திறன் மேம்பாட்டு திட்டங்கள் மூலம் பயன்பெற்ற தமிழ்நாட்டு கிராமப்புற இளைஞர்களின் எண்ணிகை குறித்த விபரங்கள்,நடப்பு நிதியாண்டில் திறன் மேம்பாட்டு திட்டங்களுக்கு ஒன்றிய அரசு ஒதுக்கியுள்ள பட்ஜெட் எவ்வளவு? அரசாங்கத்தின் திறன் மேம்பாட்டு முயற்சிகளின் ஒரு பகுதியாக கிராமபுறங்களில் நிறுவப்ப ட்டுள்ள திறன் பயிற்சி மையங்களின் எண்ணிகை எவ்வளவு? தொலைதூர கிராமத்தில் வசிக்கும் கிராமப்புற இளைஞர்களுக்கு எளிதில் இந்த திறன் மேம்பாட்டு மையங்களை பயன்படும் வகையில் கிடைக்க பெற ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று நாடாளுமன்றத்தில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி ஒன்றிய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சர் ஜெயந்த் சௌத்ரியிடம் கேள்வி எழுப்பினார்.

